மக்கள் குரல் 14-1-2016

# பண்ணாரி அம்மன் கல்லூரியில் பொங்கல் விழா

பண்ணாரி அம்மன் தொழில்நுட்ப கல்லூரியில், பாரம்பர்ய விளையாட்டுப் போட்டிகளுடன் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

சத்தியமங்கலம் பண்ணாரி அம்மன் தொழில் நுட்பக் கல்லூரியில், பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

பண்ணாரி கல்வி குழும தலைவர் பாலசுப்பிரமணியன் தலைமை தாங்கினார். மாணவர் அமர்நாத் வரவேற்று பேசினார். கல்லூரி முதல்வர் சரவணன் வாழ்த்துரை வழங்கினார்.

விழாவில், பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி ஜெயந்தி ஸ்ரீ பாலகிருஷ்ணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசுகையில், இளைஞர்கள், பொங்கல் திருவிழாவை, தனது பெற்றோர்களுடன் கொண்டாட வேண்டும். தற்போது இளையதலைமுறையினர், தொலைக்காட்சிகளில் தங்களது மகிழ்ச்சிகளை தொலைத்து வருகின்றனர்.



மாணவர்கள் சகோதரத்துவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

விழாவையொட்டி, மாணவர்களுக்கு, உரி அடித்தல், வழுக்கு மரம் ஏறுதல், கரும்பு உடைத்தல், கயிறு இழுத்தல் உள்ளிட்ட போட்டிகளும், மாணவிகளுக்கு நாற்று நடுதல், கோலம் போடுதல், பொங்கல் வைத்தல், பானை அலங்காரம் போன்ற போட்டிகளும் நடத்தப்பட்டது. தொடர்ந்து, போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, பரிசுகள் வழங்கப்பட்டது.